## R 5269 (page 200)

# "அவர் மேகங்களுடனே வருகிறார்"

## "HE COMETH WITH CLOUDS"

"இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரை குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். பூமியின் கோத்திரத்தார் எல்லாரும் அவரைப் பார்த்து புலம்புவார்கள்."
- வெளிப்படுத்தல் 1:7

நமது கர்த்தராகிய இயேசு தமது இரண்டாம் வருகையில் முழு மானிட குடும்பததிற்கும் தெரியும்படியாக வருவார் என்பதற்கு ஆதாரமாக இந்த வேத வாக்கியம் பொதுவாக குறிப்பிடப்படுகிறது. அவர்கள் அவரைப் பார்க்கும் பொழுது அவர்கள் அனைவரும் அழுது புலம்புவார்கள். அது அவர்களுக்கு ஒரு துக்கமான நாளாக இருக்கும்- விசேஷமாக யூதர்களுக்கு. மற்ற வேத வாக்கியங்களின் வெளிச்சத்தில் இந்த வேத வாக்கியங்களின் நமது கருத்து மாறானதாக இருக்கிறது. ஆரம்பத்தில் நமது கர்த்தரே கூறினதாவது: "இன்னும் கொஞ்ச காலத்திலே உலகம் என்னைக் காணாது. நீங்களோ என்னைக் காண்பீர்கள்." நமது கர்த்தரின் உண்மையான சீஷர்கள் மட்டுமே அவரை காணக்கூடியவர்களாக இருந்தார்கள். இயேசுவின் சீஷர்கள் அவரைக் காண்பார்கள், ஏனெனில் அவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் "ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே" மறுரூபமாக்கப்படுவார்கள் என்று அப்போஸ்தலர் பவுல் விளக்குகிறார். நமது கர்த்தரின் தற்போதைய நிலைமை, ஆவிக்குரிய நிலைமையில் பரலோக நிலைமையில் இருக்கிறார். அதாவது அவர் பூமிக்கு வருவதற்கு முன்பு இருந்த நிலைமையைக் காட்டிலும் இன்னும் மேலான நிலைமையில் இருக்கிறார்.

"உலகம் உண்டாகிறதற்கு முன்னே," கர்த்தர் உலகத்திற்கு வருவதற்கு முன்னே அவருக்கு தேவனிடத்தில் உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது அவரை மகிமைப்படுத்தும்படி கர்த்தர் பிதாவினிடத்தில் ஜெபித்தார். தேவன் அவரை மகிமைப்படுத்தியிருந்ததாகவும் இன்னும் மகிமைப்படுத்துவதாகவும் உறுதியளித்தார். (யோவான் 17:5; 12:28) நமது கர்த்தர் மகிமையடைந்த நிலையில் தூதர்களுக்கும் கர்த்தத்துவங்களுக்கும் வல்லமைகளுக்கும் மேலான நிலைமையில் இருக்கிறார். (பிலிப்பியர் 2:9,10) அவர் மனிதனாக இருந்த போது "தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்தார்." (எபிரேயர் 2:6-9) நமது கர்த்தர் இப்போது பிதாவின் தன்மையின் சொரூபமாயிருக்கிறார். (எபிரேயர் 1:3) மேலும் அவர் "மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமாயிருக்கிறார்" என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன.

கிறிஸ்துவின் வருகையானது உலகத்தை ஆசீர்வதிப்பதற்காக என்று இன்னொரு வேத வாக்கியம் நமக்கு கூறுகிறது. அவரது வருகையின் நோக்கமானது பரிதாபகரமான மற்றும் விழுந்துபோன இனத்தை உயர்த்துவதற்காக ஆகும். பரிசுத்த பேதுரு "இளைப்பாறுதலின் காலங்கள்" மற்றும் "உலகத் தோற்றம் முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள்" வரும் என்று நமக்கு கூறுகிறார். (அப்போஸ்தலர் 3:19-21)

இந்த கடைசி கூற்றை நாம் அவர் மேகங்களுடன் வருவார், கண்கள் யாவும் அவரைக் காணும், முழு மனுக்குலமும் "அவரைப் பார்த்து புலம்புவார்கள்" என்ற வசனத்துடன் எப்படி

இசைவுப்படுத்தப் போகிறோம்? மேகங்களுடனே வருகிறார் என்பது மற்ற வேத வாக்கியங்களுக்கு இசைவாக துன்பத்தின் நாட்களைக் குறிக்கிறது. “மேகங்கள்” என்பது துன்பத்தை, இருளான நாளைக் குறிக்கிறது. அவர் மேகங்களில் வருகிறார். அந்த சமயத்தில் அவர் தம்மை உலகத்துக்கு முதலில் வெளிப்படுத்துகிறது இருளான நாளாக இருக்கும். “யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் இதுவரைக்கும் சம்பவியாத உபத்திரவகாலம்.” இனிமேலும் சம்பவியாது என்று நமக்கு சொல்லப்படுகிறது. ( மத்தேயு 24:21 ) அது மேகம் சூழ்ந்த இருளான ஒரு நாளாக இருக்கும்.

அந்த நாளில், இறுதியில் கண்கள் யாவும் திறக்கப்படும். சகல மனுக்குலமும் தங்களது புரிந்துகொள்ளும் கண்களினால் அவரைக் காண்பார்கள். நாம் இப்போது அவரைக் காண்பது போல காண்பார்கள். அதாவது அவரைப் பற்றியும் பிதாவானவரைப் பற்றியும் அறிந்து கொள்வார்கள். ஒரு குருடன் இதே அர்த்தத்தில் காண்பான். அவன் சொல்லுகிறான்.“நான் இப்பொழுது காண்கிறேன்.” அதாவது அவனது அறிவின் கண்களால் அவரைப் பார்க்கிறான். இயற்கையான கண்களால் காண்பதைக் காட்டிலும் அறிவின் கண்களால் காண்பது மிகவும் சிறந்தது.

இப்பொழுது இருளானது பூமியை மூடிக்கொண்டிருக்கிறது. “அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.” ( 2 கொரிந்தியர் 4:4) தற்காலத்தில் மனக்கண்கள் குருடானவர்கள்

**R5269 : page 201**

அநேகர் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் வருகையின் நோக்கத்தை அவர்கள் அறியார்கள். அவர் ஏன் வருகிறார் என்பதற்கான வேத போதனைகள் அவர்களிடத்தில் இல்லை. ஆனால் அவர்களது குருடான கண்கள் திறக்கப்படும். ஆபிரகாமுக்கும் அவரது காலத்திற்கு பிறகு சகல தீர்க்கதரிசிகளுக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தின்படி “பூமியிலுள்ள சகல வம்சங்களும்” ஆசீர்வதிக்கப்படுவதற்காகவே கர்த்தரின் ராஜ்யம் என்கிற உண்மையை சகல மனுக்குலமும் அறிந்து கொள்வார்கள்.

யூதர்கள் அவரை கண்டுணர்ந்து கொள்வார்கள். அப்போஸ்தலர் பவுல் கூறுவதாவது: “புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரயேலரில் ஒரு பங்குக்கு கடினமான மனுதுண்டாயிருக்கும். இந்த பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்.” (ரோமர் 11:25,26) அதாவது இயேசுவின் முதலாம் வருகையின் போது அவர்களிடத்திலிருந்த தவறான புரிந்து கொள்ளுதல், அறியாமை மற்றும் குருட்டுத்தனத்திலிருந்து இரட்சிக்கப்படுவார்கள். இன்னொரு வேத வாக்கியம் கூறுகிறதாவது: “மனுஷ குமாரனுடைய அடையாளம் காணப்படும்.” அதை அவர்கள் பார்க்கிற போது, “மனுஷ குமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.” (மத்தேயு 24:30) “குத்தினவர்களும்” அவரை நோக்கி பார்த்து ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காக புலம்புகிறது போல அவருக்காக புலம்புவர்கள்.” (சகரியா 12:10) அவர்கள் அவரை சரியாக உணர்ந்து கொண்டு திறக்கப்படும் முதலாவது கண்கள் அவர்களுடையதாக இருக்கும். ஆனால் அதே சமயம் இயற்கையான கண்களால் பார்க்கக் கூடியது எதுவும் இருக்காது.

எல்லாவற்றிற்கும் முதலாவது கிறிஸ்துவின் பிரசன்னம், அல்லது பரோஷியா இருக்கும். இது அவரது மணவாட்டி வகுப்பாராகிய அவரது சபைக்கு மட்டுமே தெரியும். பரோஷியாவில் அவரது வேலையின் உச்சக்கட்டம், முதலாம் உயிர்த்தெழுதலில் சபையை தன்னிடத்தில் சேர்த்துக் கொள்வதாகும். அவர் பழிவாங்கும் எரிகிற அக்கினியில் வெளிப்படுத்தப்படுவார் என்று வேதவாக்கியங்கள் கூறகின்றன.

"வானத்தின் மேகங்கள்" பொதுவாக குழப்பத்தை குறிப்பிடுகின்றன. உலகமானது அவரது பிரசன்னத்தை அறியாதபடி சில காலம் இருக்கும். ஆனால் அவர்கள் இந்த யுக முடிவில், மகா ஆபத்தான நாளில், கோபத்தின் நாளில் அறிந்து கொள்ளுவார்கள். பிறகு அவர்கள் புலம்புவார்கள். முழு உலகமும் புலம்பலில் இருக்கும். உலகமானது கடந்த காலத்தில் புலம்பலில் இருந்திருந்தால், நாம் இன்னும் அதிகமான புலம்பலை, ஆபத்து பொதுவாக இருக்கும் போது எதிர்பார்க்கலாம். துன்பத்தின் மத்தியில் அவர்கள் தேவனுடைய மகிமையை படிப்படியாக கற்றுக்கொள்வார்கள். மகிமையான மேசியாவின் ராஜ்யத்துக்கு வழி நடத்தும்படியாக மனித சுய நலமானது ஒதுக்கி தள்ளப்பட்டது என்பதை அவர்கள் காண்பார்கள். இந்த ராஜ்யத்தின் மூலம் தான் தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற சகல ஆசீர்வாதங்களும் வரும்.

------------------------